# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.
# TIRUVANNAMALAI.

**S.C. No.98/2020**
**PW1**

| | | |
|---|---|---|
| Name | : | சிவா |
| Father's Name | : | லட்சுமணன் |
| Village | : | கோனலூர் |
| Taluk/District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 29.07.2025.
A1 to 7 present. A8 to 11 absent. Petition U/s.317 Crpc filed and allowed for A8 to 11.

**முதல் விசாரணை**

நான் கோணலூர் கிராமத்தில் வசித்து தற்போது கட்டிட பொறியாளராக மும்பையில் பணிபுரிகிறேன் . ஆஜர் எதிரிகளை தெரியும் . அவர்கள் எங்கள் ஊரைசேர்ந்தவர்கள். ஆஜர் ஆகாத எதிரிகள் அர்விந்தத் , செல்வராஜ், கார்த்திக் , ஆறுமுகம் ஆகியோரையும் தெரியும் . ( மேற்படி எதிரிகளுக்கு குவிமுச 317 மனு அனுமதிக்கப்பட்டது). 04.12.2015 அன்று நான் வீட்டில் இருந்தபோது ஊர் தலைவர் சுமதி, சீத்தாராமன், பிரகாஷ், சண்முகம் , பாலு, ரமேஷ், செல்வராஜ், ஆறுமுகம், கார்த்தி ஆகியோர் கும்பலாக கையில் கத்தி , கடப்பாரை, தடி, கொம்பு , இரும்பு ராடு ஆகியவற்றை எடுத்து வந்து என் பட்டா நிலத்தில் இறங்கினார்கள் . என் நிலத்தில் இருந்த 63 தேக்கு மரங்களை அடியோடு வெட்டித்தள்ளினார்கள் . என் வீட்டு காம்பவுண்டின் 12 அடி உயரம் , சுமார் 60 அடி நீளம் கொண்ட சிமெண்ட் சுவரை உடைத்து விட்டார்கள். மேற்படி சேதத்தின் மதிப்பு ரூ. 35 லட்சம் இருக்கும். அப்போது என் வீட்டில் நான் , என் அம்மா சுகந்தா, என் பெரியம்மா மலர்கொடி, தம்பி விஜய் ,

அக்கா தீபா ஆகியோர் இருந்தார்கள். நான் எதிரிகளை பார்த்து ஏன் இப்படி அநியாயம் பண்ணுகிறீர்கள் என்று கேட்டேன் . அதற்கு எதிரி பெருமாள் " தெவிடியாபையா, கோத்தா இங்க என்னடா வந்து கேட்டுகினு இருக்க நீ " என்றும் " ஒழுங்காய் ஓடிப்போய் விடுஎன்றும், இல்லையென்றால் உன்னையும் உன் குடும்பத்தையும் ஒழித்துவிடுவோம் " என்று சொன்னார். அப்போது உடன் இருந்த எதிரிகள் தகாத வார்த்தைகளால் திட்டினார்கள். ஒழுங்காக என் மீது போட்ட கேஸை வாபஸ் வாங்கி ஊரை விட்டு " ஓடிவிடுங்கள் இல்லையென்றால் உங்கள் எல்லாரையும் குடும்பத்தோடு பெட்ரோல் ஊற்றி எறித்து விடுவோம் " என்று திட்டினார்கள். நீங்கள் எங்க போய் கேஸ் கொடுத்தாலும் எங்கள் மயிரை கூட பிடுங்க முடியாது என்று திட்டினார்கள் . நாங்கள் போன முறையே RI யையே அடித்தோம். ஜாக்கிரைதையாக இருந்துகோங்க என்று சுமதி , சீத்தாராமன், பிரகாஷ்,சண்முகம், பாலு ஆகியோர் என்னை மிர்ட்டினார்கள். நாங்கள் பயந்து வீட்டிலேயே இருந்தேன். 24.11.2015 அன்று ஊர் நபர்கள் 5 பேர் என் வீட்டில் வந்து என்னையும் என் பெரியம்மாவையும் அடித்தார்கள். நான் பயந்து வீட்டிற்கு வந்துவிட்டேன். 05.12.2015 அன்று இரவு 08.30 மணிக்கு வேட்டவலம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். தற்போது நீதிமன்றத்தில் காண்பிக்கப்படுவதுதான் அந்த புகார் . அது **அ.சா.ஆ.1.** அடுத்த நாள் போலிசார் என்னை விசாரித்தார்கள் . சுடுகாட்டுக்கு செல்லும் வழி சம்மந்தமாக எங்களுக்கும் எதிரிகளுக்கு சண்டை இருந்து வந்தது . போலிசார் விசாரித்தபோது இந்த விஷயத்தை சொன்னேன்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை -</u>.**

சம்பவ காலத்தில் எனக்கு 21 வயது இருக்கும். புகாரில் வயது 22 என்று உள்ளது என்றால் சரிதான். புகாரில் வெட்டப்பட்டதாக சொல்லப்படும் தேக்கு மரங்களின் எண்ணிக்கையை 260 என்பதை எழுதி அதில் "2 "என்பதை வெள்ளை மையினால் அழித்து விட்டு 0 என்பதை 3 ஆக திருத்தி 63 என எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். என் பாட்டி கண்ணம்மாள் ன்னை உயர்நீதிமன்றதில் தாக்கல் செய்த Writ மனுவில் எதிரிகள் தரப்பினர்கள் இல்லை என்றால் அதைபற்றி எனக்கு தெரியாது . OS 194/2012 என்ற வழக்கில் யார் தரப்பினர்கள் என்றால் சீத்தாராமன் , கணேசன், மாவட்ட ஆட்சியர் என்றால் சரிதான் . எதிரிகளுக்கும் எனக்கும் தனிப்பட்ட முறையில் எவ்வித விரோதமும் இல்லை என்றால் சரிதான் . முதல் எதிரி சுமதி ஊராட்சி மன்ற தலைவராக இருந்தார் என்றும், எதிரி செல்வராஜ் உப தலைவராக இருந்தார் என்றால் சரிதான் . எதிரி சீத்தாராமன் முன்னாள் தலைவர் என்றால்

சரிதான். எதிரிகள் ஊரில் திருவிழா நடந்தபோது அதை ஏற்பாடு செய்தார்கள் என்றால் சரிதான். சம்பம் நடந்தபோது சுமதி, பெருமாள், சீத்தாராமன், பிரகாஷ், சண்முகம், பாலு, ரமேஷ், அர்விந்த், கார்த்தி, ஆறுமுகம் ஆகியோர் வெட்டவந்தார்கள் நான், என் அம்மா சுகந்தா, மலர்கொடி, தீபா, விஜய் ஆகியோர் தடுத்தோம். மேற்கண்ட சம்பவம் தொடர்பாக எங்களை யாரும் அடிக்கவில்லை, நாங்கள் மருத்துவமனைக்கு போகவில்லை. சம்பவம் 04.12.2015 அன்று மாலை 4 மணிக்கு நடந்தது. என் மீது கொலைவெறி தாக்குதல் நடந்ததாக நான் புகாரில் சொல்லியுள்ளது பொய்தான். அதுபோல் யாரும் என்னை தாக்கவில்லை. புகாரின் 2 வது பக்கத்தில் எங்களுக்கு சொந்தமான பட்டா நிலத்தில் இருந்து சுமார் 17 வருடமாக வளர்த்து வந்த 35 லட்சம் மதிப்புள்ள மரங்களின் எண்ணிக்கையை ஏற்கனவே ஒரு எண்ணிக்கை எழுதப்பட்டு அது வெள்ளை மை வைத்து அடிக்கப்பட்டு 63 என எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். வேட்டவலம் காவல் நிலையத்திற்கும் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் கோணலூருக்கும் இடையே 13 கி.மீ தூரம் இருக்கும் என்றால் சரிதான். நான் 28 நேரம் கால தாமதத்துடன் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். எதிரிகள் வீட்டருகே இருந்ததால் புகார் கொடுக்கவில்லை. நான் வழக்கிற்காக ஆர அமர உட்கார்ந்து யோசனை செய்துவிட்டு புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. சம்பவ காலத்தில் அதிக மழையால் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு கோணலூர் தெற்கு பகுதி முழுவதும் மழைநீரினால் சூழப்பட்டிருந்தது என்றால் சரிதான். துறிஞ்சல் ஆற்றில் இருந்து ஒரு ஓடை என் வீட்டிற்கு மேற்கு பக்கம் செல்கிறது என்றால் அது ஓடை அல்ல சின்ன கால்வாய். அதன் அகலம் 15 அடி இருக்கும் என்றால் சரியல்ல. சுமார் 4- 5 அடி இருக்கும். சுவர் இடித்ததாக சொல்லப்படும் இடம் அரசுக்கு சொந்தமான புறம்போக்கு இடம் என்றால் கொஞ்சம் பட்டா இடத்திலும், கொஞ்சம் புறம்போக்கு இடத்திலும் உள்ளது. அந்த ஓடை செல்லும் வழியில் நாங்கள் சுவர் கட்டியிருந்ததால் அது நீரில் மூழ்கி உடைந்து விட்டது என்றால் சரியல்ல. என்னுடைய புகாரில் ஆஜர் எதிரிகளின் பெயரோடு மற்றும் பலர் என்று குறிப்பிட்டு எத்தனை நபர்கள் என்றால் சுமார் 50 நபர்கள் இருந்தார்கள். அவர்கள் பார்த்துவிட்டு சென்றுவிட்டார்கள். எந்தெந்த எதிரிகள் எந்தெந்த ஆயுதங்களை வைத்துள்ளார்கள் என்று புகாரில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். என் வீடு வடக்கு பார்த்த வாசல் என்றால் சரிதான். என் வீட்டிற்கு முன்புறம் சுமார் 50 அடி தள்ளிதான் காம்பவுண்ட்டு போட்டியிருந்தேன் என்றால் சரிதான். மரம் வெட்டியதாக சொல்லப்படும் இடமும் சுமார் 150 அடி மேற்கில் உள்ளது. புகாரில் நான் பயந்து கொண்டு வீட்டில் இருந்தேன்

என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான் . வீட்டின் பால்கணியில் இருந்தேன் . என்னிடம் காண்பிக்கப்படும் போலிசார் தயார் செய்த வரைபடத்தில் சுடுகாட்டுக்கு செல்லும் வழி என்று ஒரு பாதையை காண்பித்துள்ளார்கள் என்றால் சரிதான் . எதிரிகள் வெவ்வேறு கட்சியை சேர்ந்தவர்கள் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. சம்பவத்திற்கும் எதிரிகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றும் காலங்காலமாக ஊர்மக்கள் பயன்படுத்திவந்த பாதையை தடுக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து அதற்கு வலுவூட்டும் வகையில் இந்த வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல . ஊர்பொதுமக்களை அச்சுறுத்துவதற்காக எதிரிகள் மீது ஒரு பொய் புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல . இவ்வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை சம்பவம் நடந்த இடத்தில் 06.12.2015 அன்று விசாரித்தார்கள்.

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

**Sd/- B.C .Gopinath**

Additional District Judge,

Tiruvannamalai.